(iii). ஆய்கூடத்தில் காபனீரொட்சைட்டு வாயுவை இனங்காண பயன்படும் பதார்த்தம்.

1. பல்மாணிக்கம் 2. தெளிந்த சுண்ணாம்புநீர்

3. நீர் 4. தேங்காயெண்ணெய்

(iv). தாவரங்களில் உணவு உற்பத்திச் செயன்முறையின் போது வளி மண்டலத்துடன் சேரும் வாயு.

1. ஒட்சிசன் 2. காபனீரொட்சைட்டு

3. நைதரசன் 4. ஐதரசன்

(v). நீரில் காணப்படும் நுண்ணங்கிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு மிகப் பொருத்தமான உபகரணம்.

1. தொலைகாட்டி 2. கூட்டு நுணுக்குக்காட்டி

3. கைவில்லை 4. அரிய இருவிழியன் (Binocular)

02. தரப்பட்டுள்ள விடைகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

(i) தாவரங்களில் உணவு தொகுப்பதற்குத் தேவையான சக்தியை வழங்குவது ............................ (சூரியனாகும் / மனிதனாகும்)

(ii) விலங்குகளுக்கு எல்லைப்படுத்தப்பட்ட வளர்ச்சி (உண்டு / இல்லை)

(iii) அனைத்து விலங்குகளும் (தற்போசணிகள் / பிறபோசணி) ...................... ஆகும்.

(iv) விலங்குகளில் காணப்படுவதும் பெரும்பாலான தாவரங்களில் காணப்படாததுமான ஒரு இயல்பு (இடப்பெயர்ச்சி / இனப்பெருக்கம்).

(v) ஒளித்தொகுப்பிற்கு அத்தியாவசியமான காரணிகளுள் ஒன்று (ஒட்சிசன் / காபனீரொட்சைட்டு).



LIVEWORKSHEETS

03. தரப்பட்டுள்ள தாவரங்களை இணைக்கவர்ச்சுட்டியைப் பயன் படுத்தி வகைப்படுத்துக.

புல், மா, கொய்யா, செவ்வரத்தை, தென்னை

04. பின்வரும் விலங்குகளை இணைக்கவர்ச்சுட்டியைப் பயன் படுத்தி வகைப்படுத்துக.

பூனை, வண்ணத்துப்பூச்சி, கோழி, மாடு, மண்புழு, அட்டை

## கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| உயிரங்கிகள் | - Living Organism | இனப்பெருக்கம் | - Reproduction |
| உயிரற்றவை | - Non living Things | சுவாசம் | - Respiration |
| சூழல் | - Environment | ஒளித்தொகுப்பு | - Photosynthsis |
| நுண்ணங்கிகள் | - Microorganism | பல்வகைமை | - Diversity |
| வளர்ச்சி | - Growth | இணைக்கவர்ச்சுட்டி | - Dischotomous Key |
| போசணை | - Nutrition | தற்போசணி | - Autotrophic |
| அசைவு | - Movement | பிறபோசணி | - Heterotrophic |
| இடம்பெயர்வு | - Locomotion | | |



LIVEWORKSHEETS